பக்கங்கள் 25+ 03

# மாலை முரசு

**செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் வள்ளிபுனத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு**

(பா.சதீசன், விஜயரத்தினம் சரவணன்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம், 07

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 29 வியாழக்கிழமை 14.08.2025 | அதிர்வு 014

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# செம்மணிப் புதைகுழி அகழ்வில் வெளிநாட்டு நிபுணத்துவ சேவை

## சுமந்திரனின் சட்டவாதத்தை அடுத்து யாழ்ப்பாணம் நீதிமன்றம் பரிசீலனை



செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியில் மீட்கப் படுகின்ற எலும்புக்கூடுகளை மரபணு ரீதியாக அடையாளம் காணும் பணிக்கு வெளிநாட்டு நிபுணத்துவ சேவைகளை அகழ்வுப் பணியின்போதே நேரடியாகப் பிரசன்னமாகி யிருக்கும் வகையில் பெறுவது குறித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் பரிசீலனை செய்கின்றது. 05

# செம்மணி அவலத்தின் சூத்திரதாரிகளான படையினர் நாட்டை விட்டுத் தப்பியோடலாம்

## தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றிடம் சுமந்திரன் கோரிக்கை

செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் நாட்டை விட்டுத் தப்பி ஓடாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றை தமது சமர்ப்பணத்தில் கோரினார்.

1990 களின் கடைசி வரையான காலத்தில் இந்தப் பிரதேசத்தில் காணாமல்போன ஆள்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நான்கு பேர் கொண்ட ஆணையம் ஒன்றை நியமித்து விசாரணை 05

# இன்று நீதிமன்றத்தில் செம்மணி வழக்கில் ஆராயப்பட்டவைப் பற்றி சுமந்திரன் தகவல்

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் இன்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது அங்கு ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் வழக்கு விசாரணையின் பின்னர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட்டார். அவர் கூறிய விடயங்கள் வருமாறு:-

“செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் நீதிமன்றத்தில் இன்று அழைக்கப்பட்டது. அந்த வேளை 06



# செஞ்சோலை வளாகத்தில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி

(பா.சதீசன்,
விஜயரத்தினம் சரவணன் )

செஞ்சோலை வளாகத்தில் ஸ்ரீலங்கா இராணுவ விமானப் படையின் வான் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களின் நினைவேந்தல் நிகழ்வு இன்று நடைபெற்றது.

முல்லைத்தீவு - வள்ளிபுனம், இடைக்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் பயிற்சிக்காகச் சென்றிருந்த மாணவர்கள் மீது இலங்கை விமானப் படை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவிகள் 54 பேர் மற்றும் பணியாளர்கள் 7 பேரினதும் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வான்



தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 2006.08.14 ஆம் திகதியன்று வள்ளிபுனம் -இடைக்கட்டு பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் விமானத் தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் இன்று இந்த நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் வே. கரிகாலன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்களான சி.குகனேசன், க.தர்மலவன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன், தாயக நினைவேந்தல் அமைப்பின் தலைவர் முல்லை ஈசன் மற்றும் இளைஞர்கள், பொதுமக்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலியைச் செலுத்தினர்.















### யாழ். பல்கலைக்கழகத்தில்

# செஞ்சோலைப் படுகொலையின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

(பிரபாகரன் டிலக்சன்)

செஞ்சோலைப் படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ். பல் கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் அமைந்துள்ள சுற்றுவட்டத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கொல்லப்பட்டவர்களின் உருவப் படங்களுக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் பல் கலைக்கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதி யில் இருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி விமானப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 150 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகா யமடைந்திருந்தமை குறிப்பிடத்தக் கது.









# இந்தியக் கடற்பரப்பில் இரு இலங்கையர் கைது!

## யாழ். மாவட்டப் பதிவு இலக்கம் கொண்ட படகும் சிக்கியது

(ந.லோகதயாளன்)

இந்தியக் கடற்பகுதியில் நின்ற படகில் இருந்த இரண்டு இலங்கையரை இந்தியப் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டப் பதிவு இலக் கம் கொண்ட படகு ஒன்று, இயந்திரக் கோளாறு காரணமாக இந்தியாவின் வேதாரண்யத்தை அண்டிய கடல் பகுதியில் இரண்டு இலங்கையர்களுடன் நின்றது. அந்தப் படகை இந்திய மீனவர்கள் இழுத்துச் சென்று கரை சேர்த்துள்ளனர்.

படகில் இருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரும் வேதாரண்யம் பொலிஸ் நிலையம் கொண்டு செல் லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர்.



# பிரபல மகளிர் பாடசாலையின் அதிபர் நியமனத்தில் மோசடி!

## வடக்கு ஆளுநரிடம் முறைப்பாடு

கிளிநொச்சியில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையொன்றின் அதிபர் நியமனத்தில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது என்று சிவசேனை அமைப்பால் வடக்கு மாகாண ஆளு நரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள் ளது.

இது தொடர்பில் சிவசேனை அமைப் பினர் தெரிவித்ததாவது:-

"கிளிநொச்சியில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையொன்றின் அதிபர் பதவிக்குப் பொருத்தமான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டிருந்தன.

இந்த நியமனங்களுக்காக யாழ்ப்பா ணத்தில் இருந்து ஒருவரும், கிளி நொச்சியில் இருந்து ஆறு பேருமாக ஒட்டுமொத்தமாக ஏழு பேர் நியமிக் கப்பட்டிருந்தனர்.

ஆனால், தகுதி நிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு, அவர்களுக்கான வாய்ப்பு மறுக்கப் பட்டுள்ளது.

அதேநேரம், அதிபர் பதவிக்கு விண் ணப்பிக்காத அருட்சகோதரியொருவ ருக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு, புள்ளிகள் வழங்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பதவி நிலைக்கு விண்ணப்பிக்காத அருட்சகோதரி எவ்வாறு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டார். எந்த அடிப்படையில் அவருக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப் பட்டுள்ளன என்பதில் எமக்குப் பெரும் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

இதைவிட குறித்த பாடசாலைக்கு தரநிலை ஒன்றில் உள்ள அதிபரே நியமிக்கப்படலாம். தர நிலை ஒன்றில் உள்ளவர்கள் எவரும் விண்ணப்பிக்காத பட்சத்தில் தரநிலை இரண்டில் உள்ள வர்கள் நியமிக்கப்படலாம். ஆனால், இவை இரண்டிலும் இல்லாமல், தர நிலை மூன்றில் உள்ளவரே தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். எனவே, இந்த நியமனம் பக்கச்சார்பானது மற்றும் தவறானது என்பது இதிலிருந்து தெளி வாகின்றது.

இந்தப் பொருத்தமற்ற நியமனத் துக்காக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விசாரிக்கப்பட வேண்டும்." - என்றனர்.

## செம்மணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முன் வைத்த நீண்ட சட்ட வாதத்தை அடுத்து இது தொடர்பில் நீதிமன்றம் பரிசீலனை செய்யத் தீர்மானித்தது.

”செம்மணி மனிதப் புதைகுழியில் அகழப்படும் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்படுவது மிக முக்கியமாகும். அதற்கு வெளிநாட்டு நிபுணத்துவ சேவையே முன்னைய சந்தர்ப்பங்களில் எல்லாம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. இப்போது இதுவரையில் இங்கு 147 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்றமையால் அவற்றை அடையாளம் காணும் வெளிநாட்டு நிபுணத்துவ சேவையை பின்னர் நாடாமல், இப்பொழுதே அகழ்வுப் பணி நடக்கும் போதும் அதனோடு சேர்ந்து அந்த நிபுணத்துவத்தை பயன்படுத்துவது முக்கியம். அகழ்வின்போதே அவர்கள் பிரசன்னமாகியிருப்பது அவசியம்““ – என்று அது பற்றிய விவரங்களோடு இன்று யாழ் . நீதவான் நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதம் ஒன்றை முன்வைத்தார்.

அதனைக் கவனத்தில் எடுத்த யாழ். நீதிவான் ஏ.ஆனந்தராஜா வெளிநாட்டு நிபுணத்துவ சேவையை அவ்வாறு பெறுவதாயின் அதற்குப் பொருத்தமான – தகுந்த – வெளிநாட்டுத் தரப்புகள் தொடர்பில் உரிய பரிந்துரைகளைச் செய்யுமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு இன்று பணிப்புரை விடுத்தார்.

செம்மணி மனிப் புதைகுழி விவகாரம் இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் சார்பில் பல சட்டத்தரணிகள் பிரசன்னமாகி இருந்தனர்.

மீட்கப்படும் எலும்புக்கூடுகளை அடையாளம் காணும் பணி தொடர்பான விசாரணைகளில் வாக்குமூலம் அளிக்க விரும்பும் பொதுமக்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (சி.ஐ.டியினரால்) அச்சுறுத்தப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு சட்டத்தரணிகளால் வைக்கப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான கே.குருபரன், வி.மணிவண்ணன் போன்றோரும் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினர்.

அதனால் இந்த விசாரணைகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரை விலக்கி வைக்குமாறு உத்தரவிடும்படி சுமந்திரன் வாதம் ஒன்றை முன்வைத்தார்.

““இப்போது நடைபெறுவது ஒரு வகையில் மரண விசாரணைதான். அது முடிவடைந்து, உத்தரவோ, தீர்ப்போ வருவதற்கு முன்னர் அந்த விசாரணைக்குள் குற்றப் புலனாய்வுத் தரப்பினர் வரவேண்டிய தேவை இல்லை. ஆயினும், விதிவிலக்காக இந்த விவகாரத்தில் குற்றப் புலனாய்வுத் துறையினரின் பங்களிப்பைப் பொலிஸ்மா அதிபர் வேண்டியிருக்கின்றார். நீதிமன்றமும் அனுமதித்து இருக்கின்றது. ஆனால் அவர்கள் எலும்புக்கூடுகளை அடையாளம் காணும் பணிக்குத் தாமாகவே முன் வருகின்ற



போது மக்களை அச்சுறுத்தி, சிரமத்துக்கு உள்ளாக்கி அந்தப் பொதுமக்களை விடயத்தில் இருந்து விலக்கி வைக்க முயல்கின்றனர்” என்ற சாரப்பட சுமந்திரனின் வாதம் அமைந்தது.

இந்த விடயத்தில் சுமந்திரனின் வாதத்தை நீதிமன்றம் பதிவு செய்தது. ஆயினும், குற்றப் புலனாய்வாளர்களை விலக்கி வைக்கும் கோரிக்கை தொடர்பில் நீதிமன்றம் உத்தரவு எதனையும் வழங்கவில்லை.

கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட இராணுவச் சிப்பாய் சோமரத்ன ராஜபக்ஷ அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் 1990 களின் கடைசியில் செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 15 மனித எலும்புக்கூடுகள் தொடர்பான வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் உள்ளது. அதனையும் இப்போது அகழப்படும் மனிதப் புதைகுழி விவகாரத்தோடு தொடர்புபடுத்தி அந்த வழக்கையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்துக்கு மாற்றும் கோரிக்கை ஒன்றை நீதிச் சேவை ஆணைக்குழு ஊடாக முன்வைக்கும்படியும் சுமந்திரன் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அந்த வழக்கு இந்தப் புதைகுழியோடு எவ்வாறு தொடர்புபடுகின்றது என்று நீதிவான் கேள்வி எழுப்பினார்.

“சோமரத்ன ராஜபக்ஷ பல நூற்றுக் கணக்கில் – 300 முதல் 400 வரையான – பொதுமக்கள் இப்பிரதேசத்தில் புதைக்கப்பட்டனர் என்று வாக்குமூலம் அளித்திருந்தார். அப்போது 15 எலும்புக்கூடுகள்தான் மீட்கப்பட்டன. இப்போதுதான் நூற்றுக்கணக்கில் அதே பிரதேசத்தில் எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. ஆகவே, அந்த வழக்கையும் இதனோடு ஒன்று சேர்த்து விசாரணை முன்னெடுப்பது முக்கியம்” – என்றார் சுமந்திரன்.

அது தொடர்பில் ஆராய புலனாய்வாளர்களுக்குப் பணிப்புரை வழங்கினார் நீதிவான்.

மீட்கப்பட்ட 147 எலும்புக்கூடுகளில் 90 வீதத்துக்கு அதிகமானவை உடைகள் இன்றி நிர்வாணமாகப் புதைக்கப்பட்டவை என்பது சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுவே இங்கு ஒரு பெரும் குற்றச் செயல் இடம்பெற்றிக்கின்றது என்பதை நிரூபிப்பதாகச் சுமந்திரன் தமது வாதத்தின் ஊடாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

## செம்மணி அவலத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தது.

தேவநேசன் நேசையா தலைமையிலான இந்தக் குழுவில் கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோ, ஜெஸிமா இஸ்மாயில், சி.எம்.இக்பால் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

அந்த ஆணைக்குழு நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருக்கின்றது. அந்தச் சமயத்தில் காணாமல்போன 300 பேர் வரையானோர் குறித்து அந்த ஆணைக்குழு விசாரணை நடத்தி இருக்கின்றது. அவர்களில் 200 பேர் வரை இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்ட அந்த விசாரணை ஆணைக்குழு அதில் சம்பந்தப்பட்ட பல படையினரின் பெயர் விவரங்களையும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது

என்று தெரிவித்த சுமந்திரன் சுமார், 210 பக்கம் கொண்ட அந்த ஆணைக்குழு அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையின்படி, காணாமல் போனோரின் பெரும்பாலானோர் இந்த செம்மணிப் பிரதேசத்தை நெருக்கமான பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது ஆணைக்குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல அவ்வாறானோரில் பெரும்பாலானோரின் கதி செம்மணித் தரவையில் முடிவுற்றிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் அந்த அறிக்கை கொண்டிருந்தது.

அவற்றை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்த சுமந்திரன், அந்த அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் இந்த எலுப்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, விசாரணை மும்முரமடையும்போது நாட்டை விட்டுத் தப்பி ஓடி தலைமறைவாகக் கூடிய வாய்ப்பு உண்டு. அது குறித்து முற்கூட்டியே நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுமந்திரன் நீதிமன்றத்தைக் கோரினார்.

அந்த ஆணைக்குழு அறிக்கையின் பிரதியைப் பெற்றுக்கொண்ட நீதிவான் இந்த விடயம் குறித்து புலனாய்வு செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினரைப் பணித்தார்.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஓர் அறிக்கையையும் சட்ட வைத்திய அதிகாரி பேராசிரியர் ஒரு அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளார்கள்.

இதில் பேராசிரியருடைய அறிக்கையிலே ஸ்கானர் பாவிக்கப்பட்டதற்கு பிறகு இன்னமும் குறைந்தது எட்டு வார காலத்திற்கு மேலதிக அகழ்வுகள் செய்ய வேண்டிய தேவை இருப்பதாக அறிவித்திருக்கிறார்.

அது சம்பந்தமாக நீதிவான் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இதற்குரிய ஒழுங்குகள் செய்யுமாறும் கட்டளையிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்ற அனுமதியைக் கோரி இங்கே மேற்பார்வையை செய்வதற்கு அனுமதி பெற்றிருந்தது. அந்த வகையிலே இரண்டு தடவைகள் நான் அங்கே சென்றிருந்தேன். அதனடிப்படையிலே மன்றிலே இன்றைக்கு சில விடயங்களை மன்றினுடைய கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றேன்.

இதில் முதலாவதாக இந்த அகழ்வு ஒரு மரண விசாரணையாகத்தான் நிகழ்கிறது. குற்றவியல் நடவடிக்கையிலும் இப்படியான விடயத்துக்கு என்று சட்ட ஏற்பாடுகள் எதுவும் கிடையாது.

ஆகையினாலே ஒரு உடல் எங்காவது கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக ஒரு மரண விசாரணையாகத்தான் அது மாறுகின்றது. அதனால்தான் நீதிவான் அந்த மரண விசாரணையை நடத்துகின்றார். எந்த மரண விசாரணையிலும் மிக முக்கியமான ஒரு விடயம் அந்த உடல் யாருடையது என்ற அடையாளப்படுத்துதல். அவ்வாறு அடையாளப்படுத்துவதுதான் பிரதான நோக்கமாக இருக்கிறது.

ஆகவே அகழ்வுப் பணிகள் நடைபெறுகின்றதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, இதனை அடையாளப்படுத்துவது எப்படி என்ற கேள்வி எழுகிறது.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் சட்ட வைத்திய அதிகாரி இன்னுமொரு விடயத்தையும் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இங்கிருப்பவர்களுக்கு நிபுணத்துவம் இல்லை என்றெல்லாம் போலியான செய்திகள் ஊடகங்களில் பரப்பப்படுகின்றது என்றெல்லாம் சொல்லப்பட்டது. அதைப் பற்றிய முறைப்பாடுகள் நேரடியாக எழுத்து மூலமாக செய்யுமாறு நீதிமன்றத்தால் அவர் பணிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், அகழ்வுப் பணியில் நிபுணத்துவம் இருந்தாலும் அடையாளப்படுத்தலிலே இந்த நாட்டில் நிபுணத்துவம் இல்லை என்பது எல்லோருக்கும் எல்லாருக்கும் தெரிந்த விடயம் என்கின்ற சமர்ப்பணத்தை நான் முதலிலே செய்தேன்.

அதற்குச் சான்றாக மன்னார், மாத்தளை போன்ற விடங்களிலும் சான்றுப் பொருள்கள் முதலில் வெளியே அனுப்பப்பட்டன. கடந்த 1999 ஆம் ஆண்டு செம்மணியிலே கண்டெடுக்கப்பட்ட 15 எலும்புக்கூட்டுத் தொகுதி சான்றுப் பொருள்களும் முதலிலே ஹைதராபாத் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கேயும் அதற்கான நிபுணத்துவம் இல்லையென்று திருப்பி கொண்டு வரப்பட்டு, அது பின்னர் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டு அந்த சான்றுப் பொருள்கள் தற்போது லங்கஷ்யர் பல்கலைக்கழகத்தில் இருப்பதாக நாங்கள் அறிகின்றோம் என்ற தகவலை மன்றுக்கு நான் கொடுத்திருக்கின்றேன்.

அந்த வேளையிலே சோமரட்ன ராஜபக்ஷ என்கின்ற ஒரு மரண தண்டனைக் கைதி, மரண தண்டனை விதிக்கிற போது மேல் நீதிமன்றத்திலே செய்த கூற்றின் அடிப்படையிலேதான் அந்த அகழ்வு நடத்தப்பட்டது.

ஆனால் 15 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மட்டும்தான் கண்டெடுக்கப்பட்டன. அது அகழ்வதற்கு முன்னதாக அவர் செய்த கூற்றிலே 300 தொடக்கம் 400 வரையானோர் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் அந்த வேளையில் செய்த அகழ்வுப் பணியிலே 15 மட்டும் தான் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பொழுது ஏற்கனவே 147 எலும்புக்கூட்டு தொகுதிகள் இங்கே கண்டெடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே – அவர் காண்பித்த இடத்திற்கு மிக அருகாமையிலே இது இருப்பதால் – இதைத்தான் அவர் சொல்லியிருக்க வேண்டும்.

26 வருடங்களுக்கு பிறகு இது தற்செயலாக கண்டெடுக்கப்பட்டதாக இருந்தாலும் இப்படி இங்கே நூற்றுக்கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டதென்று அவர் 26 வருடங்களுக்கு முன்னர் சொன்னமை சரியானதாக இப்பொழுது நிரூபணமாகின்றது என்ற அடிப்படையிலே அந்த விடயத்தோடு இந்த விடயமும் தொடர்புபட்டது என்பது கண்கூடாகத் தெரிகின்றது என்ற சமர்ப்பணத்தையும் செய்தேன்.

அந்த விடயத்திலேபி 2899 என்கின்ற வழக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்திலே ஆரம்பிக்கப்பட்டு, பல இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் முதலில் வைக்கப்பட்டு, பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் சிலர் விடுவிக்கப்பட்டு, பின்னர் ஐந்து பேர் பிணையில் செல்லவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அந்த வழக்கு அவர்களுடைய பாதுகாப்பின் நிமித்தமாக முதலிலே அனுராதபுரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, அதன் பிறகு அது இப்பொழுது கொழும்பிலே பிரதான நீதிவான் நீதிமன்றத்திலே இருக்கின்றது என்கின்ற தகவல் எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

அதையும் நான் மன்றுக்கு சொல்லி பி 2899 என்கின்ற யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்கேட்டில் இருந்து அனுப்பப்பட்ட அந்த வழக்கை மீளவும் இந்த நீதிமன்றத்துக்கே பாரப்படுத்துமாறு ஒரு கோரிக்கையை நீதிவான் செய்ய வேண்டுமெனக் கேட்டிருந்தேன்.

அவர் இந்த விடயத்திலே அப்படியாக இந்த இரண்டும் தொடர்புபட்டதா என்பதை முதலிலே பரிசீலித்து அவ்வாறு தொடர்புபட்டதாயின் அதனை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருக்கின்றார்.

அதேபோல் சோமரட்ன ராஜபக்ஷ எந்தக் காலப் பகுதியிலே இங்கு உடல்கள் புதைக்கப்பட்டது என்று சொன்னாரோ அதே 1999 ஆண்டு அந்தக் காலப் பகுதியிலே இந்தப் பிரதேசத்திலே பிரதானமாக பலர் காணாமல் ஆக்கப்பட்ட முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமை சங்கத்திற்கு கொடுக்கப்பட்டு இருந்ததன் காரணமாக கலாநிதி தேவநேசன் நேசையாவின் தலைமையிலே இன்னும் மூவரடங்கிய விசாரணைகுழு நியமிக்கப்பட்டு, அவர்கள் 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 ஆம் திகதி தங்களுடைய விசாரணை அறிக்கையை சமர்ப்பித்து, அது அந்த நேரமே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

210 பக்கங்கள் அடங்கிய அந்த அறிக்கையொன்றின் பிரதியை நான் மன்றுக்கு சமர்ப்பித்து இருக்கிறேன். அந்த அறிக்கையிலே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அரியாலை, சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்பாண நகர் மற்றும் நகரை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இதில் 300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இருந்தாலும் 200 இற்கும் மேற்பட்டவைக்கு படைத்தரப்பினரே பொறுப்பானவர்கள் என்றும் திட்டவட்டமாக அதிலே சொல்லப்பட்டிருக்கின்றது.

அதில் மேலும் பல விவரங்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. அந்தப் படைத்தரப்பினர் யார், எந்தெந்த முகாம்களில் யார், யார் இருந்தார்கள் என்று பெயர்கள் அதிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன். அந்த முகாம்களுக்கு பொறுப்பாக இருந்தவர்கள் யார் என்ற விவரங்கள் எல்லாம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகையினாலே இந்த விவரங்களை இப்பொழுது மன்றிலே சமர்ப்பிக்கின்ற பொழுது இதற்கு பொறுப்பாக இருந்திருக்க கூடியவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு சந்தர்ப்பம் கூடுதலாக இருக்கிற காரணத்தினாலே இது சம்பந்தமாக உரிய உத்தரவு கொடுக்க வேண்டுமென நான் கோரியிருக்கிறேன்.

அப்படியான ஒரு உத்தரவையும் மன்று செய்யவில்லை. ஆனால் அது சம்பந்தமாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அதனை அறிந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டிருக்கிறது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைப் பொறுத்த வரையிலே இந்த விடயங்கள் சம்பந்தமாக அவர்கள் இப்பொழுது புலன் விசாரணை செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள். சாதாரணமாக மரண விசாரணை முடிவடைந்த பிறகுதான் புலன் விசாரணை ஆரம்பமாகும். ஆனால், சமாந்தரமாக ஒரு புலன் விசாரணை தேவை என்று பொலிஸ்மா அதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் செய்கிறார்கள்.

ஆரம்பத்திலே அதற்கு எதிர்ப்பு எதுவும் இல்லையென்றாலும் இன்றையதினம் நானும் சட்டத்தரணி மணிவண்ணனும் சட்டத்தரணி குருபரனும் சிலரை வாக்கு மூலம் பெறுவதற்கு வரவழைத்து அவர்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் பயமுறுத்தினார்கள் என்ற முறைப்பாட்டை முன்வைத்திருக்கிறோம்.

அதனடிப்படையிலே வாக்குமூலம்

(07ஆம் பக்கம் பார்க்க)














## செஞ்சோலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்கட்டுப் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தில் தலைமைத் துவப் பயிற்சிக்காக வருகை தந்திருந்த மாண வச் செல்வங்கள் மீது ஸ்ரீலங்கா விமானப் படை விமானங்கள் நடத்திய மிலேச்சத் தனமான தாக்குதலில் உயிரிழந்த 54 மாணவிகளினதும் 7 பணியாளர்களி னதும் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வள்ளிபுனம் – இடைக்கட்டுச் சந்தியில் அமைக்கப்பட்ட நினைவிடத்தில் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ் டிக்கப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் உறவுக ளின் அனுசரணையில் தாய் தமிழ் பேரவையின் ஆதரவோடு சமூகச் செயற் பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்த உறவுகளுக்கு சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் வே.கரிகாலன், தாய் தமிழ் பேரவையின் ஸ்தாபகர் ச.ரூபன், அரசியல் பிரமுகர்கள், கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக ளின் உறுப்பினர்கள், சமூகச் செயற் பாட்டாளர்கள், பொதுமக்கள் , நலன் விரும்பிகள், செஞ்சோலையில் உயிரி ழந்த பிள்ளைகளின் பெற்றோர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இன்று...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்க எவரும் முன்வருகின்ற போது – அங்கேயே – இந்த மயானத்திலேயே – அந்தப் பிரதேசத்திலேயே அனைவரும் காணக்கூடிய இடத்திலேயே – வாக்கு மூலங்களைப் பதிவு செய்வது உசிதமா னது என்று நீதிவான் உத்தரவிட்டிருக் கின்றார்.

நான் விசேடமாக என்னுடைய விண் ணப்பத்திலே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை இந்த விடயத்திலிருந்து அகற்றுமாறு ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கின்றேன். இந்த வேளையிலே அவர்கள் இதிலே ஈடுபடத் தேவையில்லை. அவர்களை இங்கே இருந்து அகற்றுமாறு ஒரு கோரிக்கையை முன்வைத்திருக் கின்றேன்.

அதுமட்டுமல்ல சான்றுப் பொருள்க ளும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்க ளுக்கு அனுப்பப்படுவதாக இருந்தால் அந்தப் பல்கலைக்கழக ஆய்வு கூடங்க ளிலே இதைச் செய்யப் போகின்றவர்கள் இப்பொழுது வந்து இதனை மேற்பார்வை செய்ய வேண்டும்.

ஏனென்றால் யாருடைய கட்டுக்காவ லில் இந்த சான்றுப் பொருள்கள், எப்படியாகக் கைமாறுகின்றன என்பது ஒரு முக்கியமான விடயம். ஆகையினாலே இதனையும் செய்ய வேண்டுமென நான் விடுத்த கோரிக்கைக்கு நீதிவான் சட்டவைத்திய அதிகாரியிடத்தே இதை ஆராயுமாறு ஒரு கோரிக்கையை வைத் திருக்கிறார்.

இதை ஆராய்ந்து எப்படியான பல்கலைக்கழகத்துக்கு அனுப்ப முடியுெ மன்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவு றுத்தியிருக்கிம்றார். சட்ட வைத்திய அதிகாரி இன்னுமொரு விடயத்தை மன்றுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அதாவது யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலே மரபணுப் பரிசோதனை செய்வதற்கான ஓர் ஆய்வுகூடம் நிறுவப்பட்டுக் கொண்டு இருப்பதாகவும், அதற்குத் தேவையான உபகரணங்கள் வந்து சேர்ந்து விட்டன என்றும் வெகு விரைவிலே தங்களாலே இதனைச் செய்ய முடியுமென்றும் சொல்லியிருந்தார்.

ஆனால் முதன் முதலிலே செய்யப்ப டுகிற பரிசோதனை, இந்தப் பரிசோத னையில் இருப்பது உசிதமல்ல என்கின்ற விடயத்தை நான் மன்றுக்கு தெரியப்படுத்தி இருக்கிறேன்.

இந்த விடயங்களிலே தெளிவாக நிபுணத்துவம் வாய்ந்தது என்பது மட்டு மல்ல, அனுபவமுள்ள ஒரு ஆய்வுகூடம் அல்லது பல்கலைக்கழகம் இதைச் செய்வது உசிதம் என்ற கருத்தையும் நான் முன்வைத்திருக்கின்றேன்.

ஆகவே அது குறித்த தீர்மானம் பின்னர் எடுக்கப்படும். எட்டு வாரங்களுக்கு இதனை ஆய்வு செய்கிற ஒழுங்குகள் விசேடமாக அதற்கான நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தமான விடயங்கள் செய்யப்பட வேண்டும் என்கின்ற உத்தரவும் தற்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் எதிர்வரும் 20 ஆம் திகதி இந்த இடம் மீள் சுத்தப்படுத்தபடுவதாகவும் அதற்குப் பின்னர் 22 ஆம் திகதி மீண்டும் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் என்றும் நீதவான் கூறியிருக்கின்றார்." – என்றார்.



# சுன்னாகத்தில் திருடப்பட்ட நகைகளுடன் ஊர்காவற்றுறையில் ஒருவர் சிக்கினார்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். சுன்னாகத்தில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் மற்றும் கைத்தொலைபேசிகளுடன், பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் ஊர்காவற்றுறை, நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருகையில்,

வழமை போன்று பகல் வீதி கண்காணிப்பு நடவக்கைகளுக்காக கொஸ்தாபசு ஹறிதாஸ் தலைமையிலான ஊர்காவற்றுறைப் பொலிஸ் அணியினர் நாராந்தனைப் பகுதியில் ஈடுபட்டிருந்த போது, வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர் நடமாடியதை அவதானித்த பொலிஸார், அவரை மறித்து சோதித்த போது அவரது காற்சட்டை பொக்கற்றில் தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள், பென்ரன்கள், இருந்ததை அவதானித்தனர்.





இதையடுத்து அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது அவை சுன்னாகம் பகுதியில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் எனத் தெரியவந்தது.

இதையடுத்துச் சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டபோது அங்கு பல நவீன கைத்தொலைபேசிகள், ஒரு தொகைப் பணம், இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பல பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார், சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சந்தேகநபரையும் மீட்கப்பட்ட பெறுமதிமிக்க பொருள்களையும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஊர்காவற்றுறைப் பொலிஸார் ஒப்படைத்தனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், பெறுமதிமிக்க நகைகள், பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்து திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய விசாரணைகளில் பொலிஸார் தீவிரம் காட்டியுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# செஞ்சோலையில் கொல்லப்பட்டோருக்கு யாழ். மாநகர சபை அமர்வில் அஞ்சலி!

(ந.லோகதயாளன்)

செஞ்சோலையில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சின்போது பரிதாபகரமாகக் கொல்லப்பட்ட பாடசாலை மாணவிகளின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாநகர சபையின் ஓகஸ்ட் மாத அமர்வு இன்று மாநகர மேயர் திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது 2006 ஆம் ஆண்டு வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலையில் முகாமைத்துவப் பயிற்சி இடம்பெற்றபோது இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதன் 19 ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டியே இன்று யாழ்ப்பாணம் மாநகர சபை அமர்வில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநகர மேயரின் அறிவிப்பையடுத்து அனைவரும் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தினர்.

அகவணக்கத்தையடுத்து நினைவுச் சுடரை மாநகர மேயர் ஏற்றிவைத்தார்.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆணையாளரின் நப்பாசை

சர்வதேச குற்றங்கள் உட்பட கடந்த காலங்களில் செய்யப்பட்ட கடுமையான மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்குத் தண்டனை விலக்களிப்பு வழங்கும் போக்கிலிருந்து விடுபடவும், மாற்றத்துக்கான சீர்திருத்தங்களைச் செயல்படுத்தவும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வழங்குவதற்கும் கிடைத்திருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுமாறு இலங்கை அரசை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்.

எதிர்வரும் செப்டம்பர் பத்தாம் திகதி முதல் ஒக்டோபர் மூன்றாம் திகதி வரை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அறுபதாவது கூட்டத்தொடர் நடக்க இருக்கின்றது.

இலங்கையில் மீள்நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் போன்றவற்றை மேம்படுத்துவது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும் தொடர் தீர்மானங்களின் வரிசையில் கடைசித் தீர்மானம் 2022 ஒக்டோபரில் நடைபெற்ற 51 ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அது 2024 ஒக்டோபரில் காலாவதியாக இருந்த சமயத்தில் அப்போது நடந்த 57ஆவது அமர்வில் அது மேலும் ஓர் ஆண்டுக்கு நீடிக்கப்பட்டிருந்தது.

இப்போது அந்த நீடிப்பும் காலாவதியாகும் சூழலில், இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தச் செய்யும் தனது முயற்சியின் அடுத்த கட்டமாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இம்முறை இலங்கை தொடர்பாக புதிய பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து அதனை இந்த அமர்வில் தீர்மானமாக நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தடவை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமெரிக்கா இல்லை. ட்ரம்ப் நிர்வாகம் அதிகாரத்தில் இருந்த காலங்களில் எல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இருந்து அமெரிக்கா வெளியே வருவது வாடிக்கை. அந்த வகையில் இம்முறையும் அது வெளியேறிவிட்டது.

அதனால் இம்முறை இலங்கை தொடர்பான பிரேரணையை முன்மொழியும் இணை அனுசரணை நாடுகளுக்கு பிரிட்டன் தலைமை வகிக்கின்றது.

இணை அனுசரணை நாடுகள் பிரேரிக்கப் போகும் புதிய பிரேரணை இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆணையாளர் சமர்ப்பிக்கப் போகும் அவதானிப்பு அறிக்கையை ஒட்டி, அதன் தொடர் நடவடிக்கையாக இருக்கும் என்று கருதப்படுவதால், இலங்கை தொடர்பில் அவரின் அறிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது.

அந்த அறிக்கையின் நகல் வடிவத்திலேயே மேற்படி வரலாற்றுச் சந்தர்ப்பம் பற்றிய கோரிக்கையை ஆணையாளர் வோல்கர் டர்க் முன் வைத்திருக்கிறார்.

இது, இப்போது இலங்கைக்கு கிடைத்த முதல் வரலாற்றுச் சந்தர்ப்பம் அல்ல. யுத்தம் முடிந்த பின்னர் அதிகாரத்துக்கு வந்த ஐந்தாவது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க. அவருக்கு முன்னர் இந்தப் பதவிகளில் இருந்த எல்லோருக்குமே இத்தகைய அருமையான சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் அவர்கள் யாரும் பயன் படுத்தவில்லை.

இப்போது அந்த வரிசையில் அநுரகுமார திஸநாயக்கவும் பயன்படுத்த மாட்டார் என்பது உறுதியானது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தாராளமாக இழைக்கப்பட்டன என்பது ஐ.நாவின் புலனாய்வு நடவடிக்கைகளிலேயே அம்பலமாகி இருக்கும் சூழலில், அவ்விவகாரத்தையொட்டி நீதி, நேர்மையான விசாரணைகளை நடத்தி, குற்றம் இழைத்த பேரினவாத இராணுவப் படையினரை காட்டிக் கொடுக்க அநுரகுமார திஸநாயக்குட்பட எந்த சிங்கள ஆட்சியாளரும் முன் வரப் போவதில்லை.

இந்தப் பின்புலத்தில் இந்த வரலாற்று சிறப்புமிக்க வாய்ப்பை பயன்படுத்துங்கள் என்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் கோரிக்கை கடைசியில் அவரின் வெறும் நப்பாசையாக முடியுமே தவிர, சிங்களம் தன்னை இவ்விவ விமான பணியாளர்கள் வேலை நிறுத்தம்;

ஏர் கனடா விமான சேவைகள் திடீர்

# இரவு நேரத்தில் வீதி மின் விளக்குகள் ஒளிராமையால் மக்கள் பெரும் அவதி

**(மஸ்கெலியா)**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மஸ்கெலியா நகரில் ஒரு சில பகுதிகளிலும் பிரதேச சபைக்கு உட்பட்ட தோட்டங்களிலும் பொருத்தப் பட்டுள்ள மின் குமிழ்கள் இரவில் ஒளிர்வதில்லை.

கடந்த சில மாதங்களாக இந்த மின் விளக்குகள் ஒளிராமையால் இரவு நேரங்களில் பயணிகள், முதியோர்கள், நோயாளிகள் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபை முன் வந்து மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து மின் விளக்குகளையும் ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.








# காட்டு விலங்குகளிடம் இருந்து பயிரைக் காக்க வாயுத் துப்பாக்கி!

(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர் ஏ.எச்.)

வாயுத் துப்பாக்கியின்பயன்பாடு குறித்த அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டுதல் பயிற்சிநெறி நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சிநெறி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா மற்றும் மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் பங்குபற்றினர்.

திருகோணமலை மாவட்டத்தில் அறுவடை காலத்தில் காட்டு விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காக இந்த் வாயுத் துப்பாக்கிகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இந்த ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் இத்துப்பாக்கிகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,032,500 பெறுமதியான 153 வாயுத் துப்பாக்கிகள் 6 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டது.இவை உரிய பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்படும்.



பட்டினமும் சூழலும்,குச்சவெளி, தம்பலகாமம், கோமரங்கடவல, சேருவில மற்றும் மூதூர் ஆகிய 6 பிரதேச செயலகங்களுக்கே இந்த 153 துப்பாக்கிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் இத்துப்பாக்கிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய குறுகிய பயிற்சியும் பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

இதன்படி இவ் அதிகாரிகள், துப்பாக்கிகளை பெறும் விவசாயிகளுக்கு அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய பயிற்சியை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், கணக்காளர் ஏ.எல்.பிரசாத் விஜேசிங்க, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.கே. விஜயதாசன், மாவட்ட உதவி திட்டமிடல் பணிப்பாளர் என். கோவிந்தராஜன், மாவட்டபதவிநிலைஉத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# கால்பந்து சாதனை வீரர்கள் அக்கரைப்பற்றில் கௌரவிப்பு

(றிஸ்வான் சாலிஹு)

மலேசியாவில் ஞாயிற்றுக்கிழமை (10) நடைபெற்ற கால்பந்து சுற்றுப் போட்டித் தொடரில் இலங்கை சார்பாக கலந்து கொள்ள சென்று இரண்டாவது இடத்தை பெற்ற கொழும்பு இளைஞர் கால்பந்து அக்டமியில், அக்கரைப்பற்று விஷன் கால்பந்து அக்டமியைப் பிரதிநிதித்துப்படுத்திக் கலந்து கொண்ட ஐந்து இளம் வீரர்களை பாராட்டி கௌர விக்கும் நிகழ்வு விஷன் கால்பந்து அக்டமியின் தலைவர் ஏ. ரீ. முஷரர்ப் தலைமையில் அக்கரைப்பற்று மாநகர சபை திறந்த வெளியரங்கில் செவ்வாய்க் கிழமை (12) நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக அக் கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ. எல். எம். அதாவுல்லா கலந்து கொண்டார்.

இங்கு உரையாற்றிய மாநகர முதல்வர் தனதுரையில், இந்த இளம் விளையாட்டு வீரர்களின் திறமையால் அடைந்த சாதனையானது இப்பிராந்திய மக்களுக்கு கிடைத்த கௌரவம் என்று நினைக்கிறேன்.

இது இவர்களின் ஆரம்பமே தவிர முடிவில்லை. இந்த மாணவர்களின் எதிர் காலம் சிறக்க நான் வாழ்த்துவ தோடு, விஷன் கால்பந்து அக்டமியின் தூரநோக்கு சிந்தனையானது இப்பிராந் தியத்திலுள்ள இளைஞர்கள் கெட்ட வழிகளில் தங்களுடைய நேரங்களை வீணாக செலவழிக்காமல் சமூகம் பாராட்டக் கூடிய இந்தத் துறையில் மாணவர்களை இணைத்துள்ளமை பாராட்டக்கூடியதாகும். இவர்களோடு அக்கரைப்பற்று மாநகர சபையும் இத்துறையை மேலோங்க செய்ய சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் என்றார்.

இந்தச் சுற்றுத்தொடரில் மலேசியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகிய அணிகளோடு கொழும்பு இளைஞர் கால்பந்து அக்டமி மோதி வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் இந்திய அணியோடு விளையாடியதில் இரண்டாம் இடத்தைப் பெற்று தாய் நாட்டுக்கும் தாய் மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ள னர்.

இந்த நிகழ்வில் மாநகர பிரதி முதல்வர் யூ. எல். உவைஸ், மாநகர சபை உறுப்பினர்கள், அதிபர் எம். எஸ். எம். அஸ்லம், அக்டமியின் வீரர்கள் மற்றும் இப்பிராந்திய பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# திருகோணமலை குளக்கோட்டன் வித்தியாலய அணி சம்பியனானது!

(எஸ்.கீதபொன்கலன்)

அண்மையில் நடைபெற்ற 2025 இற்கான கிழக்கு மாகாண பாடசாலைகள் மட்ட வலைப்பந்தாட்ட போட்டிகளில் 18 வயதின் கீழான பிரிவில் திருகோணமலை குளக்கோட்டன் வித்தியாலய அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள் ளது.




# அட்டாளைச்சேனை பிரதேசத்துக்குட்பட்ட கரும்பு காணிகள் தொடர்பில் கலந்தாய்வு

(நவாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் அட்டா ளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆலங்குளம் திகவாபி போன்ற கரும்பு விவசாயிகளின் காணிகளை எதிர்காலத்தில் சம்மந்தப்பட்ட காணி உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள் ளது.

அந்தக் காணிகளில் எவ்வகையான பயிர்களை மேற்கொள்ளலாம் என்பது சம்மந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் அதன் பிரதேச செய லாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தலை மையில் அம்பாறை மாவட்ட உதவி காணி ஆணையாளர் ஏ.எல்.பானு தலைமையிலான குழுவினர்கள் பிரதேச செலகத்தில் நேற்று (12) ஒன்று கூடி இந்த விடயம் தொடர்பில் கலந்து ரையாடினர்.

அதன்பின் சம்பந்தப்பட்ட பிரிவு காணிகளுக்கு கள விஜயம் மேற்கொண் டனர். இதன்போது நில அளவையாளர் மற்றும் காணிப் பிரிவு உத்தியோ கத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# ஓட்டோக்களுக்குப் பொதுவான தரிப்பிடம் அமைத்தல் தொடர்பில் கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட ஓட்டோகளுக்குப் பொதுவான தரிப்பிடங்கள் அமைத்தலும் மக்களுக்கான வினைத்திறனான சேவைகளை வழங்குதலும் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (12) தவிசாளர் தலைமையில் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தவிசாளர் , செயலாளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், பொலிஸ் பொறுப்பதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், விடய உத்தியோத்தர், வருமானப் பரிசோதகர் மற்றும் ஓட்டோ சாரதிகள் கலந்து கொண்டனர்.



# யாழ்ப்பாணம் மாநகர சபை

**இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக்கடைகள், சந்தை, சிற்றுண்டிச்சாலைகள், வாகனத்தரிப்பிடக் குத்தகை, மலசல கூட சுத்திகரிப்புபணி, நடமாடும் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி , கேள்வி அறிவித்தல் - 2025 (01.09.2025 – 31.12.2025)**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,180.00** (வற் வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 13.08.2025 – 25.08.2025
**(மு.ப 9.00 - பி.ப.2.30.00 மணி வரை)**

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 26.08.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 26.08.2025 .மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **26.08.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்**கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
5. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
6. குத்தகை தொடர்பான ஏனைய நிபந்தனைகளை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிபந்தனையின் பிரதி தேவைப்படின் அலுவலகநேரத்தில் மாநகரசபை வளாகத்தில் உள்ள நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும
7. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப்பணத்தை 29.08.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்..

| இல | முகவரி | கடை இல | பிணைப் பணம் | 01.09.2025 - 31.12.2025 வரையான காலப்பகுதிக்கான குத்தகைக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | **இல 02** | 5,000.00 | 19,366.67 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 428,333.33 |
| 3 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 533,900.00 |
| 4 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 47,000.00 |
| 5 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 220,000.00 |
| 6 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 333,716.67 |
| 7 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 235,295.67 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 593,750.00 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 188,416.67 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 87,115.00 |
| 11 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 210,000.00 |
| 12 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 69,321.69 |
| 13 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 48,741.81 |
| 14 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 43,358.55 |
| 15 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 48,156.92 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 174,333.33 |
| 17 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 165,433.33 |
| 18 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 145,000.00 |
| 19 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 183,334.00 |
| 20 | குருநகர் கோழி இறைச்சிக்கடை | | 5,000.00 | 333,666.67 |
| 21 | புங்கன்குளம் உள்ளூர் உற்பத்தியாளர் அறிமுகச் சந்தை | | **2,000.00** | 2,188.19 |
| 22 | யாழ் பொதுநூலக சிற்றுண்டிச்சாலை | | 5,000.00 | 123,666.33 |
| 23 | துரையப்பா விளையாட்டு அரங்கு சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 38,333.33 |
| 24 | வாகனத்தரிப்பிடக் குத்தகை | | 40,000.00 | 1,203,033.33 |
| 25 | நடமாடும் கடை நெடுந்தூர பஸ் நிலையம் பயணிகள் பேருந்து நிலையம் | இல 01 | 20,000.00 | 70,833.33 |
| 26 | நடமாடும் கடை பண்ணை மீன்சந்தை | இல 01 | 20,000.00 | 72,000.00 |
| 27 | நவீனசந்தையில் அமைந்துள்ள மலசல கூடத் தொகுதி சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 1,000.00 | 8,166.67 |
| 28 | நல்லூர் சந்தைப்பகுதியில் அமைந்துள்ள மலசல கூடத் தொகுதி சுத்திகரித்து பராமரிக்கும் சேவை | | 1,000.00 | 4,666.67 |

**கேள்வி அறிவித்தல் - 2025 (22.09.2025 – 31.12.2025)**

**பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை**

| இல | முகவரி | பிணைப் பணம் | 22.09.2025 - 31.12.2025 வரையான காலப்பகுதிக்கான குத்தகைக்கட்டணம் |
|---|---|---|---|
| 1 | பண்ணை கடற்கரைப் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 20,000.00 | 207,313.67 |

**முதல்வர்,**
**யாழ் மாநகர சபை**




# அரச கரும மொழிகள் வாரத்தில் வெற்றியாளருக்குப் பரிசில்கள்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு மற்றும் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் அரசகரும மொழிகள் தினம் மற்றும் அர கரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு திருகோணமலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையில் நடைபெற்ற போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.



இந்த நிகழ்வு நேற்று முன்தினம் (12) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

மொழி என்பது ஒரு தொடர்பு ஊடகம் என்றும், கடந்த காலங்களில் மொழி மூலமாக நமது நாடு பல பிரச்சினைகளை எதிர்கொண்டதாகவும், அவற்றுக்கான தீர்வுகளைக் காண நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு நிறுவப்பட்டது என்றும் இதன்போது பிரதி அமைச்சர் கருத்து தெரிவித்தார்.

நமது நாட்டில் பயன்படுத்தப்படும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளைக் கற்றுக் கொள்வது குடிமக்களாகிய அனைவரதும் பொறுப்பாகும். இது சமூகத்தில் பணிபுரியும் போது ஏற்படும் பிரச்சினைகளைக் குறைக்கும் என மேலும் கூறினார்.

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் ஊடாக 2019 ஆம் ஆண்டு முதல் செயற்படும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 01 ஆம் திகதி முதல் ஜூலை 05 ஆம் திகதி வரையிலான 05 நாள்கள் கொண்ட காலவரையறையை அரசகரும் மொழிகள் தினம் மற்றும் அரச கரும மொழிகள் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட இணைப்பாளர் தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உத்தியோகத்தர் மும்தஸ்ரின், பாடசாலை ஆசிரியர்கள், இளைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தேசிய இளைஞர் தினத்தில் மலையக இளைஞர் புறககணிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

தேசிய இளைஞர் தினத்தில் மலையக இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை தேசிய இளைஞர் கழகத்தின் நுவரெலியா மாவட்ட பிரதிநிதி சரத்குமார் தெரிவித்துள்ளார்.



சர்வதேச தேசிய இளைஞர் தினமான நேற்று முன்தினம் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய இலங்கை தேசிய இளைஞர் கழகத்தின் பிரதிநிதி சரத்குமார் தெரிவித்துள்ளார்

ஹட்டனில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில் ஒவ்வொரு தோட்டப்புறங்களிலும் ஒவ்வொரு இளைஞர் கழகங்கள் அமைக்கப்பட வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இளைஞர் கலகங்களை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை மலையக அரசியல்வாதிகள் பேசப்பட்டு வந்தார்கள் தேசிய இளைஞர் சேவை மன்றம் என்பது தெற்காசிய நாட்டில் பெரியதொரு அமைப்பாகும். ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு இளைஞர் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு கிராம சேவகர் பிரிவில் 12 தோட்டங்கள் காணப்படுகின்றன. ஒரு தோட்ட புரத்தில் 1500 இற்கும் மேற்பட்டவர்கள் இருக்கும் பகுதியில் ஒரு இளைஞர் கழகம் போதாது என்பது கடந்த கால கோரிக்கையாகும்.

மலையகத்தில் கிராமசேவகர் பிரிவுகள் அதிகரிக்கபடாமையால்தான் எங்களுக்கு பாரிய பாதிப்பாக காணப்படுகிறது நாங்கள் தேசிய மட்டம்வரை சென்ற இளைஞர்கள் நாங்கள்.தேசிய இளைஞர் சேவை மன்றம் அரசியலாக்க கூடாது தேசிய இளைஞர் தினமான இன்று மலையகத்தில் உள்ள அரசியல்வாதிகள் சிவில் அமைப்புக்கள் அனைவரும் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.- என்றார்.



# கல்முனை கடலரிப்பு அனர்த்தம்; அரசின் கவனத்துக்கு கொண்டுவரல்!

(நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான், எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை கடற்கரைப் பகுதியில் நாளுக்கு நாள் தீவிரமடைந்துவரும் கடலரிப்பு அனர்த்தம் மற்றும் கடற்கரைப் பாதுகாப்பு கல்லணை வேலைத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள அசமந்த நிலை தொடர்பாக, கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர், சமூக வலுவூட்டல் மற்றும் கிராமிய அபிவிருத்தி பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.



இதனைத் தொடர்ந்து நம்பிக்கையாளர் சபையின் அழைப்பின் பேரில், கடலரிப்பு அபாயத்தை நேரில் பார்வையிட்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, செவ்வாய்க்கிழமை பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா மற்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள ரத்நாயக்க ஆகியோர், கரையோர பாதுகாப்புத் திணைக்கள பொறியியலாளர் துளசிதாசன் சகிதம் கல்முனை கடற்கரைப் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தனர்.

விஜயத்தின் போது, அசமந்தமாக செயற்பட்டிருந்த சம்பந்தப்பட்ட கொந்தராத்துகாரர் பணிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று பொறியியலாளர் தெரிவித்தார். மேலும், காலத்தை வீணாக்காமல் மாற்று வழிமுறைகள் மூலம் பணிகளை விரைவுபடுத்துமாறு பிரதி அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவை வழங்கினர்.

இந்த நிகழ்வில், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களுடன் பிரதேச மீனவர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து கலந்து கொண்டு, கடலரிப்பு அபாயத்தின் தற்போதைய களநிலவரங்களை விளக்கினர்.

# மடுத் திருவிழாவை முன்னிட்டு நீர்கொழும்பிலிருந்து விசேட ரயில்!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மடுப் பெருவிழாவை முன்னிட்டு வழமையான கொழும்பு கோட்டையிலிருந்து தலைமன்னார் பியருக்கு இடம்பெற்று வரும் ரயில் சேவையுடன் இந்த முறை நீர்கொழும்பிலிருந்து மடுறோட்டுக்கு விஷேட ரயில் சேவையும் இடம்பெறுகிறது.

நாளை 15 ஆம் திகதி மன்னார் மடுத் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் நலன்கருதி விசேட ரயில் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடந்தோறும் மன்னார் மறை மாவட்டத்தில் அமைந்துள்ள யாத்திரிகர் ஸ்தலமான மருதமடு அன்னையின் ஆலய பெருவிழா ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்று வருகின்றது.

இந்த விழாவுக்காக இலங்கையில் நாலாப் பக்கங்களிலிருந்தும் பல லட்சக் கணக்கான பக்தர்கள் வருகை தருவது வழமையாகும்.

இப்பெருவிழாவுக்கு மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் ஆயர் இல்லமும் இணைந்து பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகள், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து போன்ற வசதிகளை செய்வது வழமை. இந்த வகையில் இம்முறை இப்பெரு விழாவை முன்னிட்டு மடுவுக்கு விஷேட ரயில் சேவைகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

இதன்படி கொழும்பு கோட்டையிலிருந்து மடுறோட்டுக்கு வரும் ரயிலானது மாலை 03.45 மணிக்குப் புறப்பட்டு கம்பாவுக்கு 04.18 மணிக்கும் வியான்கொடவுக்கு 04.29 மணிக்கும் மீரிகமவுக்கு 04.42 மணிக்கும் பொல்காவலவுக்கு 05.05 மணிக்கும் குருநாகலுக்கு 05.29 மணிக்கும் மாகோவுக்கு 06.28 மணிக்கும் அநுராதபுரத்துக்கு 07.50 மணிக்கும் மதவாச்சிக்கு 08.20 மணிக்கும் செட்டிக்குளத்துக்கு 08.44 மணிக்கும் மடுறோட்க்கு இரவு 09.07 மணிக்கும் ரயில் வந்தடையும்.

இதேவேளை, தலைமன்னார் பியரிலிருந்து காலை 04.10 மணிக்குப் புறப்படும் ரயில் மன்னாருக்கு 04.37 மணிக்கும் முருங்கனுக்கு 05.02 மணிக்கும் மதவாச்சிக்கு 06 மணிக்கும் அநுராதப்புரத்துக்கு 06.25 மணிக்கும் மாகோவுக்கு 07.38 மணிக்கும் குருநாகலுக்கு 08.35 மணிக்கும் பொல்காவலவுக்கு 08.59 மணிக்கும் கம்பஹாவுக்கு 09.46 மணிக்கும் கொழும்பு கோட்டைக்கு காலை 10.19 மணிக்கும் இந்த ரயில் சேவை நடைபெறுகின்றது.



### சவுதியின் இரு தேச தீர்வு முயற்சி:

# நம்பிக்கையா? ஏமாற்றமா?

● எம்.என்.எம்.யஸீர் அறபாத்,
ஓட்டமாவடி.

பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடாத்தி வரும் ஆக்கிரமிப்பும் அவலமும் மனிதப்பேரழிவும் உலகளாவிய ரீதியில் பாரிய எதிர்ப்பையும் மக்கள் போராட்டத்தையும் சந்தித்துவரும் அதேவேளை, இஸ்ரேலிலும் மனிதாபிமானமுள்ள மக்கள் மத்தியில் நெத்தன்யாஹு'வின் அரசின் மீது அதிருப்தி நிலையும் மனிதக் கொலைகளால் உள்நாட்டிலும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதுடன், உலக சமாதானத்தைச் சீர்குலைக்கும் செயற்பாடாகவும் இருந்து வருகின்றது.

இந்த மனிதகுல பேரவலத்தை நிறைவுக்குக் கொண்டுவர வேண்டுமென உலகின் பல்வேறு அரபு, மேற்குல நாடுகள் முயற்சியின் பின்னணியில் சவூதி அரேபியாவும் அதன் தலைமையிலான அரபு உலகமும் இருதேச தீர்வு (Two-State Solution) எனப்படும் வழி மூலம் இந்தச் சிக்கலை முடிவுக்குக் கொண்டுவர முயற்சி செய்து வருகின்றது.

இருதேசத் தீர்வு (Two-State Solution) என்ற கருத்தை முதன்முதலில் 1937ஆம் ஆண்டு பிரித்தானிய அரசின் பீல் ஆணைக்குழு முன்மொழிந்தது. இதனை முதல் சர்வதேச அளவிலான அதிகார பூர்வ திட்டமாக 1947 இல் ஐ.நா. பொதுச் சபைத் தீர்மானம் (181) கொண்டு வரப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு தரப்பால் இரு தேச தீர்வுத் (Two-State Solution) திட்டம் முன்வைக்கப்பட்டாலும் உள்ளடக்க முரண்பாடுகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

அந்த வகையில் சவூதி அரேபியாவின் இரு தேச தீர்வுத் (Two-State Solution) திட்டமான தற்போதைய யோசனை என்பது புதிதாகத் தோன்றியதல்ல. இது 2002 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட அரபு சமாதான முன்மொழிவு (Arab Peace Initiative) என்பதுதான் இந்தத் திட்டத்தின் அடிப்படையாகும்.

சவூதி அரேபியா தலைமையிலான இந்த யோசனையானது 1967 எல்லைகளுக்குள் கிழக்கு ஜெருசலாமை தலை நகராகக் கொண்டு சுயாட்சி பாலஸ்தீன அரசை ஏனைய நாடுகளின் ஆதரவுடன் நிறுவும் திட்டமாகும்.

தற்போது சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசரும் மன்னரின் ஆலோசகராக முக்கிய பொறுப்புகளை ஏற்றுச் செயற்படும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் உட்பட அரச உயர் மட்டத்தினர் பலஸ்தீனத்துக்குத் தீர்வு வேண்டி இரு பக்கத்தினருடனும் ஐரோப்பிய நாடுகளுடனும் தொடர்ந்த பேச்சு நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான சவூதியின் முயற்சியின் பலனாக இந்தத் திட்டத்துக்கு ஐ.நா, ஐரோப்பிய யூனியன், ரஷ்யா, சீனா, ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், ஐக்கிய அரபு இராஜ்ஜியம், எகிப்து, ஜோர்டான் உள்ளிட்ட நாடுகள் ஆதரவைத் தெரிவித்துள்ளன. இவை அனைத்தும் அமைதியை அடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

இந்தத் திட்டத்தை இஸ்ரேலின் தற்போதைய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு தலைமையில் கடுமையான வலதுசாரி அரசு பலஸ்தீன அரசு ஒழுங்குபடுத்தப்படாதது, ஹமாஸ் போன்ற இயக்கங்கள் பயங்கரவாதப் பின்னணியில் இருப்பதான காரணங்களை முன்வைத்து இரு தேச தீர்வைத் தள்ளிப்போடுகிறார்கள்.

மேலும், பலஸ்தீனம் தனி நாடாக உருவாகுவது தங்களது நாட்டுக்கு ஆபத்து என்ற அடிப்படையிலும் இத்திட்டத்தை எதிர்க்கிறார்கள்.

இவ்விடயத்தில், ஹமாஸ் அமைப்பின் நிலைமை மிகவும் மாறுபட்டது. அவர்கள் இஸ்ரேலின் நிலைப்பாட்டை முழுமையாக ஏற்கவில்லை. இருப்பினும், கடந்த சில ஆண்டுகளில் பலஸ்தீன தேசம் உருவாகுவதை ஏற்கும் வகையில் சில சமரசங்களை முன்வைத்துள்ளனர்.

எனினும், இஸ்ரேலின் காசா மீதான இராணுவத் தாக்குதல்கள் மற்றும் கணிசமான பாதுகாப்பு நிபந்தனைகள், ஹமாஸை தீர்வுக்குத் தயாராக இருக்க மறுக்கும் சூழ்நிலைக்கே இட்டுச்செல்கின்றன.

இஸ்ரேலானது, ஹமாஸ் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். காசா நெருங்க முடியாத பாதுகாப்பு பரப்பாக இருக்க வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகளை விதிக்கின்றது. ஹமாஸ் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்விவகாரத்தில் பலஸ்தீனத்தின் நிலைப்பாடாக பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தலைமையிலான பி.எல்.ஓ (PLO) அமைப்பு, இரு தேச தீர்வுக்கு

தொடர்ச்சி▼

# நம்பிக்கையா? ஏமாற்றமா?

**தொடர்ச்சி▲**

ஆதரவளிக்கிறது. அவர்கள் 1967 எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு, கிழக்கு ஜெருசலேம் தலை நகராகும் ஒரு சுயாதீன தேசம் வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர். ஆனால், இஸ்ரேலின் குடியிருப்புப் போக்குகள், அமெரிக்காவின் அதிருப்தியான நடத்தை அவர்களின் நம்பிக்கையையே சீர்குலைக்கின்றன.

**மேற்குலகத்தை நம்பலாமா?**

கடந்த காலங்களில் நடைபெற்ற வரலாற்றுப் பிழைகள், இஸ்ரேலின் நலன்சார் நிலைப்பாடுகள், வணிக, பாதுகாப்பு நலன்கள் உள்ளிட்டவற்றால் மேற்குலகம் பலஸ்தீனத்துக்குச் சீரான நீதியை வழங்கும் என்பதில் பலரும் சந்தேகம் கொண்டுள்ளனர். “மேற்குலகம் கொடுக்கும் வாக்குறுதிகள், வார்த்தைகளாகவே மாறி விடக்கூடாது” என்ற கருத்தும் பலஸ்தீன ஆதரவாளர்களிடையே நிலவுகிறது.

இரு தேச தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் சாதகங்களாக பார்க்கும் போது, இரு தேசத் தீர்வு பலஸ்தீன மக்களுக்கு நீண்டநாள் எதிர்பார்த்த சுதந்திரத்தை வழங்கும் வாய்ப்பை ஏற்படுத்தும். இஸ்லாமிய நாடுகளுக்கும் மேற்குலக நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேம்படும்.

இஸ்ரேல் 1967 ஆம் ஆண்டு எல்லைக்குள் திரும்ப வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கிடையிலான மோதல்கள் குறையலாம்.

இவ்வாறான பல நன்மைகள் இந்தத் திட்டத்தின் ஊடாக ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தீர்வு செயற்பட முடியாமல் போனால், பலஸ்தீனர்கள் மற்றும் சுயாதீன பலஸ்தீனை விரும்பும் உலக மக்களும் மீண்டும் ஏமாற்றமடைவார்கள்.

இஸ்ரேலின் பாதுகாப்பு நிபந்தனைகள் பலஸ்தீனத்தின் முழுமையான சுதந்திரத்துக்குத் தடையாக அமையலாம். ஹமாஸ் போன்ற அமைப்புகள் ஒதுக்கப்பட்டால், உள்நாட்டு முரண்பாடுகள் தீவிரமாகலாம். இவ்வாறான பாதகங்களும் ஏற்படலாம்.

நீண்டு கொண்டு செல்லும் பலஸ்தீன, காசா போரையும் அதனால் ஏற்படும் அழிவுகளையும் தொடர்ந்தும் அனுமதிக்காது, ஊகங்கள், சந்தேகங்களை அடைப்படையாகக்கொண்டு இது சரி வருமா? இல்லையா? என்று விவாதம் செய்து காலத்தைக் கடத்தாது இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக இரு தேசத் தீர்வுத் திட்டத்தை சவூதி முன்வைத்திருப்பதை முன்மாதிரியான செயலாக பார்ப்பதோடு, இது தொடர்பான சவூதி அரேபியாவின் கடப்பாடு என்ன என்ற கேள்வுகளுக்கு பதிலை பின் வருமாறு பார்க்கலாம்.

சவூதி அரேபியா என்ற நாடு, ஒரே நேரத்தில் இஸ்லாமிய உலகத்தின் தலைமை பொறுப்பையும், மேற்குலகத்துடனான நட்பு நிலையையும் சம நிலைப் படுத்தும் கடினமான பணியை மேற்கொண்டு வருகிறது.

புனித ஹஜ்ஃஉம்ரா கடமைகளுக்காகவும் தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்காகவும் சவூதி உலகத்தில் நம்பிக்கை பெறும் நாடாகவே திகழ்கிறது.

இதற்கேற்ப, பலஸ்தீனத்துக்கு நீதி வழங்குவதில் முனைப்புடன் செயற்பட வேண்டியது சவூதியின் நீதி, சமாதானக்கடமை மட்டுமின்றி, மதப்பொறுப்பாகவும் இருக்கிறது.

பலஸ்தீனம் அதற்கான நியாயமான எல்லைகளோடு சுதந்திர நாடாக உருவாகும்வரை இஸ்ரேலை ஒரு நாடாக அங்கிகரிக்கப் போவதில்லை என்ற உறுதியான நிலைப்பாடோடு, இஸ்ரேல் தொடர்ந்து செய்துவரும் அட்டூழியங்களைக் கண்டித்தும் அதற்கெதிராக செயற்பட்டும் வருகிறது.



எனவே, இது ஒரு நம்பிக்கையின் சந்தர்ப்பமாக மாறுமா? அல்லது மீண்டும் ஏமாற்றத்தை தருமா, என்பது நம் உலகம் எப்படி பதிலளிக்கிறது என்பதில் தான் இருக்கிறது.

உலக நாடுகள் இந்த விடயத்தில் அமெரிக்காவையோ இஸ்ரேலையோ பகைத்துக் கொண்டு பலஸ்தீனத்துக்குத் தீர்வு வழங்க வேண்டிய எவ்விதத் தேவைகளும் இல்லாத நிலையில், பலஸ்தீனத்தில் நடக்கும் கொடுமைகளைக் கண்டு உலக நாடுகளில் வாழும் மக்களின் போராட்டங்களும் சற்று உலக நாடுகளை பலஸ்தீன விவகாரத்தில் திரும்பி பார்க்க வைத்தாலும், பலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வு என்று வரும்போதும் சவூதி அரேபியாவின் தீர்வை ஆதரிப்பதால் சவூதியுடனான நட்பும் அதன் பயன்களும் தங்களுக்குத் தேவை என்ற அடிப்படையில் பல நாடுகள் இன்று பலஸ்தீனத்தை நாடாக அங்கிகரிக்கும் மனநிலைக்கு வந்திருப்பதைப் பார்க்கலாம்.

இவ்விவகாரத்தில் சவூதி அரேபியா தனது பங்களிப்பை முழுமையாக வழங்கி வரும் இந்த நேரத்தில், உலக நாடுகளும் நீதியுடனும் மனமுடைந்த பலஸ்தீன மக்களது குரலுக்கு உரிய மதிப்பளிக்க வேண்டியது அவசியமாகின்றது. உலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதோடு, அவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதிப்படுத்தும் கடப்பாடு சவூதி அரேபியாவுக்கு இருக்கிறது.

சவூதி அரேபியாவின் தீர்வுத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் அரபுலகிலும் உலக நாடுகள் மத்தியிலும் பெரும் செல்வாக்குமிக்க பலமான நாடாக சவூதி மாறிவிடுமென்பதால் சவூதியின் எதிரிகள் இத்தீர்வு வருவதை ஒரு போதும் விரும்பமாட்டார்கள்.

சவூதி அண்மையில் வெளியிட்ட கண்டன அறிக்கையில், “இஸ்ரேலின் தொடர்ச்சியான குற்றங்களை நிறுத்த, சர்வதேச சமூகம் வலுவான, உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதன் மூலம் பாலஸ்தீன மக்களைச்சூழ்ந்துள்ள மனிதப் பேரழிவை முடிவுக்கு கொண்டு வரலாம்” 1967 ஆம் ஆண்டு எல்லைகளுக்குள் கிழக்கு ஜெருசலத்தை தலைநகராகக் கொண்டு சுயாட்சி பாலஸ்தீன அரசை உருவாக்கும் இரு நாடு தீர்வே நீடித்த அமைதிக்கான ஒரே வழி” என உறுதியாகத் தெரிவித்துள்ளது.

இவற்றைத் தடுப்பதற்கான குழப்பங்களை ஏற்படுத்த தவறான கருத்துக்களையும் சந்தேகங்களையும் பரப்பும் வேலைகளை திட்டமிட்ட அடிப்படையில் எதிரிகள் செய்வார்கள். அண்மைக்காலமாக இவ்வாறான சில செயற்பாடுகளும் நடந்ததைப் பார்க்கலாம்.

எனவே, இரு தேச தீர்வு என்ற திட்டம் தொடர்பான விமர்சனங்கள், ஐயப்பாடுகள், ஊகங்களை விட்டுவிட்டு இறைவனிடம் இத்தீர்வு பலஸ்தீனத்துக்கான விடிவாக அமைய வேண்டுமென பிரார்த்தனை செய்வோம்.

நிச்சயமாக இறைவன் எமது பிரார்த்தனையை ஏற்று ஹுதைய்பியா உடன்படிக்கையின் பின்னராக கிடைத்த வெற்றி போல பலஸ்தீனத்துக்கான வெற்றியை வழங்கப் போதுமானவன்.




# இராணுவ சிவில் அலுவலக உத்தியோகத்தர் சாரணர் சங்கத்தினரால் பாராட்டி கௌரவிப்பு

(றிபாஸ்)

அக்கரைப்பற்று 241 ஆவது இராணுவ படையணியின் சிவில் அலுவலக உத்தியோகத்தராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் லெப்டினன் கேணல் ஜே. சீ.கே. சுபசிங்கவின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெப்பை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் யூ. எல்.எம்.ஹசிம், ஸம்ஸம் பாமஸி உரிமையாளரும், பழைய சாரணருமான றினோஸ் உட்பட மாவட்ட சாரணர் சங்கத்தின் உறுப்பினர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை சாரணத்துறையில் கலைக்கூறு இரண்டு பயிற்சியை நிறைவு செய்த சாரண ஆசிரியர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





# பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பண்பாட்டு விழா வெள்ளிக்கிழமை

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டு விழா நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் விழா நடைபெறவுள்ளது.

பிரதேச செயலரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

மதிப்புறு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட கலாசார அலுவலர் திருமதி சி.மாலினி, லண்டன் தொழிலதிபர் ந. காந்தரூபன் ஆகியோரும் அதிதி கலை விருந்தினராகக் கலாபூசணம் செ. தனபாலசிங்கமும் கலந்து கொள்வர்.

பிரதேச கலைஞர்கள் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

பிரதேச செயலகத்தின் இந்த வருட கலைத் தென்றல் விருது க. தெட்சிணாமூர்த்தி (இசை, நாடகம் – முல்லையடி), வா. உதயகுமார் (கூத்து –அல்லிப்பளை), வ. ஞானச்செல்வம் (கூத்து – சோரன்பற்று) ஆகியோருக்கும் இளங்கலைஞர் விருது திருமதி சரணிதரன் சரண்யா (நடனம் – இயக்கச்சி) வுக்கும் வழங்கப்படவுள்ளன.



# தென்கிழக்குப் பல்கலையில் நில பராமரிப்பு வளநிலையம்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நில பராமரிப்புப் பிரிவுக்கு நீண்டகாலமாக நிலவிய கட்டடத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நில பராமரிப்பு வளநிலையக் கட்டிடத் தொகுதி பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைடீனால் திறந்து வைக்கப்பட்டு, குறித்த பிரிவினரிடம் உத்தியோக பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.



சுமார் ஐந்து மில்லியன் ரூபா செலவில், கட்டமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி, நில பராமரிப்புப் பிரிவின் செயல்திறனை மேம்படுத்தும் பல்வேறு பணிகளுக்குப் பயன்படவுள்ளது. குறிப்பாக, பிரிவின் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் ஆய்வுகூட வசதி உள்ளிட்ட பல்வேறு தேவைகளை நிவர்த்திக்க பயன்படுத்தப்படவுள்ளது.

கட்டடத் திறப்புவிழா, பல்கலைக்கழக பராமரிப்புப் பிரிவின் தலைவர் பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸீலின் வழிகாட்டுதலின் கீழ், முன்னெடுக்கப்பட்டது.

விழாவில் கலந்துகொண்ட உபவேந்தர் உரையாற்றும் போது,

பல்கலைக்கழக வளாகத்தின் பராமரிப்பில் குறித்த பிரிவின் உழைப்பும் அர்ப்பணிப்பும் பாராட்டத்தக்கது. புதிய வளநிலையத்தின் மூலம் பணிகளின் தரமும் விரைவுமாக முன்னேறும் என நம்பிக்கை உள்ளது என்றார்.

இந்த நிகழ்வில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், பதில் நிதியாளர் சி.எம். வன்னியாராச்சி, பல்கலைக்கழக பராமரிப்புப் பிரிவின் உயர்மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் பங்கேற்றனர்.

நிகழ்வின் போது பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் மற்றும் பராமரிப்புப் பிரிவின் தலைவர் பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸீல் ஆகியோரும் உரையாற்றி, புதிய வளநிலையம் பிரிவின் முன்னேற்றத்துக்கு வித்திடும் எனத் தெரிவித்தனர்.

புதிய வளநிலையத்தின் அங்குராப்பணம், பல்கலைக்கழகத்தின் அடிப்படை சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் முக்கிய அடிக்கல் என பங்கேற்பாளர்கள் ஒருமித்த கருத்துத் தெரிவித்தனர்.

# சாய்ந்தமருது பெண்கள் சந்தையில் தொற்றா நோய் தடுப்பு பரிசோதனை!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது கடற்கரை வீதியில் அமைந்துள்ள பெண்கள் சந்தை பகுதியில் தொற்றா நோய் தடுப்பு பரிசோதனை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையிலும் வழிகாட்டலிலும், பெண்கள் சந்தையில் உள்ள வியாபாரிகள் மற்றும் அங்கு வருகை தரும் மக்களுக்காக தொற்றா நோய் தடுப்பு பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வின் போது, பங்கேற்பாளர்களுக்குக் குருதிச் சீனி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஆரோக்கியமான வாழ்க்கை முறை, சீரான உணவு முறை, மற்றும் நீண்ட நாள் நோய்களை தடுக்கும் வழி முறைகள் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், சாய்ந்தமருது சுகாதாரவைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு தடுப்பு பணியாளர்கள் பங்கேற்றனர். இதன்போது சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேச மக்கள் நன்மை அடைந்தனர்.

# சென்னையில் 13 நாள்களாக போராடி வந்த தூய்மை பணியாளர்கள் பொலிஸாரால் கைது

தமிழ்நாடு தலைநகர் சென்னையில் உள்ள ரிப்பன் மாளிகை முன்பு கடந்த 13 நாள்களாக போராட்டம் மேற்கொண்ட தூய்மைப் பணியாளர்களை பொலிஸார் கைது செய்தனர்.

சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை அடுத்து நேற்று இரவு இந்த கைது நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர்.

சென்னை மாநகராட்சி மண்டலம் 5, 6 பகுதிகளுக்கான தூய்மைப் பணி தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்தும், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் இரண்டு மண்டல தூய்மைப் பணியாளர்களில் என்.யூ.எல்.எம். பிரிவைச் சேர்ந்தவர்கள் கடந்த 13 நாள்களாக ரிப்பன் மாளிகை முன்பு போராட்டம் மேற்கொண்டனர். தூய்மைப் பணியாளர்களுடன் அரசு தரப்பு மேற்கொண்ட பல சுற்று பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக, போராட்டம் என்ற



பெயரில் நடைபாதை, சாலையை மறித்து போராடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என தெரிவித்த உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, ரிப்பன் மாளிகை முன்பாக போராட்டம் நடத்தி வரும் தூய்மைப் பணியாளர்களை உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டது. அந்த உத்தரவை அடுத்து போராட்டம் நடத்திய தூய்மைப் பணியாளர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸ் நேற்று மாலை அறிவுறுத்தியது.

இருப்பினும் போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்கள் தங்கள் எது போராட்டத்தை அங்கு தொடர்ந்தனர். சுதந்திர தினம் நெருங்குகின்ற சூழலில் போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்கள் தங்களது கையில் தேசிய கொடியை ஏந்தி இருந்தனர். இந்த சூழலில் நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று இரவு போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்களை பொலிஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர்.

கைது நடவடிக்கைக்கு ஆளான தூய்மை பணியாளர்கள் அரசு பஸ்கள் மூலம் அழைத்து செல்லப்பட்டனர். போராட்ட களத்தில் இருந்து விலகி செல்ல மறுத்தவர்களை பொலிஸார் தூக்கி சென்றனர். பெண் தூய்மை பணியாளர்களை பெண் பொலிஸார் கைது செய்தனர்.

முன்னதாக, ரிப்பன் மாளிகை பகுதி முழுவதும் பொலிஸார் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த கைது நடவடிக்கையின் போது அங்கு பரபரப்பான சூழல் நிலவியது என தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

### சுதந்திர தின ஏற்பாடுகள் தீவிரம்:

# தமிழகத்தில் பாதுகாப்பு பணிகளில் 1 லட்சம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்

சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். முதல்வர் கொடியேற்றும் புனித ஜார்ஜ் கோட்டையைச் சுற்றிலும் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியா முழுவதும் சுதந்திர தின விழா நாளை கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியேற்றிவைத்து, சுதந்திர தினவிழா உரையாற்றுகிறார். இதையடுத்து, புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 5 அடுக்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் பொலிஸ் ஆணையர் அருண் உத்தரவின்பேரில், கூடு



தல் ஆணையர்கள் கண்ணன் (தெற்கு). கார்த்திகேயன் (போக்குவரத்து). பிரவேஷ் குமார் (வடக்கு) மேற்பார்வையில் 9,100 போலீஸார் மூலம் சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை விமான நிலையம், ரயில் நிலையங்கள். பஸ் முனையங்கள். பஸ் மற்றும் மெட்ரோ நிலையங்கள். வணிக வளாகங்கள், கடற்கரைப் பகுதிகள். வழிபாட்டுத் தலங்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் செல்லும் இடங்களில் கூடுதல் பொலிஸார் நியமிக்கப்பட்டு, கண்காணிப்பு மற்றும் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், சென்னையில் உள்ள அனைத்து தங்கும் விடுதிகள் மற்றும் ஹோட்டல்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தேக நபர்களின் நடமாட்டம் இருந்தால் பொலிஸுக்கு தகவல் தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை முழுவதும் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு, முக்கிய இடங்களில் தடுப்புகள் அமைத்து பொலிஸார் வாகன தணிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதேபோல, தமிழகம் முழுவதும் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவின் பேரில் சுமார் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# எனது உயிருக்கு அச்சுறுத்தல்: நீதிமன்றில் ராகுல் மனு தாக்கல்

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து புனே நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மனு தாக்கல் செய்துள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கடந்த 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் லண்டன் நிகழ்ச்சியில் பேசும் போது, "ஒரு முறை நண்பர்கள் சிலருடன் சேர்ந்து ஒரு முஸ்லிமை தாக்கினோம். அது மகிழ்ச்சியாக இருந்தது என சாவர்க்கர் நூலில் குறிப்பிட்



டுள்ளார்" என்றார்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாவர்க்கர் வம்சாவளியைச் சேர்ந்த சத்யாகி சாவர்க்கர் ராகுல் காந்தி மீது புனே நகரில் உள்ள எம்.பி., எம்.எல். ஏக்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்நிலையில், "மனுதாரர் நாதுராம் கோட்சேவின் வம்சாவளி ஆவார். எனவே மனுதாரரால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்." என கூறி ராகுல் காந்தி புனே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

# ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்ற அமெரிக்கா செல்கிறார் பிரதமர் மோடி



ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ததால், இந்தியா மீதான இறக்குமதி வரியை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 50 சதவீதமாக உயர்த்தினார்.

இந்நிலையில், ஐ.நா. பொதுச் சபையின் 80 ஆவது பொதுக் கூட்டம் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி தொடங்குகிறது. பொது விவாத நிகழ்ச்சி செப்ரெம்பர் 23 முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தலைவர்கள் உரையாற்றுகிறார்கள்.

இதில் உரையாற்றுமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே, இக்கூட்டத்தில் பிரதமர் கலந்துகொண்டு உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கூட்டத்தில் உலகத் தலைவர்கள் மத்தியில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பும் உரையாற்றுகிறார்.

இந்தியா மீது ட்ரம்ப் 50 சதவீத வரி விதித்துள்ள நிலையில், பிரதமர் மோடி அமெரிக்கா சென்று உரையாற்றுவது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோர் அமெரிக்காவின் அலாஸ்கா நகரில் நாளை சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர். இதில் ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டுவருவது குறித்து ஆலோசிக்கப்படும்.

இது தொடர்பாக சமூக ஊடகத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள செய்தியில், “எனக்கும், ரஷ்ய ஜனாதிபதி புடின் இடையிலான சந்திப்பு அலாஸ்கா நகரில் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த விஷயத்தில் அனைவரும் கவனம் செலுத்துவதற்கு நன்றி” என்று தெரிவித்துள்ளார்.



Ukrainian Presidential Press Service (Reuters)

# ட்ரம்புடனான மெய்நிகர் சந்திப்பு: ஐரோப்பியத் தலைவர்கள் நம்பிக்கை

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் மெய்நிகர் சந்திப்பை நடத்திய பின்னர் ஐரோப்பியத் தலைவர்கள் எச்சரிக்கையுடனான நம்பிக்கையை வெளியிட்டுள்ளனர்.

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து விவாதிக்க அலாஸ்காவில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை, டொனால்ட் ட்ரம்ப் சந்திப்பதற்கு முன்னதாக நேற்று இந்த மெய்நிகர் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த மெய்நிகர் சந்திப்பின்போது, மொஸ்கோவிற்கும் கியிவ்விற்கும் இடையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதே தனது உச்சி மாநாட்டிற்கான இலக்கு என்று டொனால்ட் ட்ரம்ப் ஐரோப்பியத் தலைவர்களிடம் கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன், உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியின் ஈடுபாட்டுடன், எந்தவொரு பிராந்திய பிரச்சினைகளும் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் பாதுகாப்பு உத்தரவாதங்கள் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்றும் டொனால்ட் ட்ரம்ப் ஒப்புக் கொண்டதாக பிரான்சின் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்புடனான இந்த சந்திப்பில், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, பின்லாந்து மற்றும் போலந்து தலைவர்களுடனும், ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் நேட்டோ தலைவர் மார்க் ருட்டேவும் பங்கேற்றனர்.

அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட அலாஸ்கா உச்சி மாநாட்டிலிருந்து ஐரோப்பியர்கள் ஓரங்கட்டப்பட்டுள்ள நிலையில், இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதேவேளை, உக்ரைனுடனான போரை நிறுத்தாவிட்டால் ரஷ்யா மிகவும் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ளும் என்று டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# அனைத்து பணயக் கைதிகளையும் ஒரே நேரத்தில் விடுவிக்க முயற்சி

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

காசாவின் போர் நிறுத்த முயற்சிகள், மீதமுள்ள அனைத்து பணயக் கைதிகளையும் ஒரே நேரத்தில் விடுவிப்பதற்கான ஒரு விரிவான ஒப்பந்தத்தில் கவனம் செலுத்துவதாக இஸ்ரேலின் பிரதமர் நெத்தான்யாகு தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இது தொடர்பான எகிப்திய அதிகாரிகளுடன் முதற்கட்ட பேச்சுவார்த்தைகளுக்காக, தமது குழு கெய்ரோவுக்கு சென்றுள்ளதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் இடையிலான மறைமுக பேச்சுவார்த்தைகள் முறிந்த பின்னர், இஸ்ரேல் தனது இராணுவத் தாக்குதலை விரிவு படுத்தியது அத்துடன், காசா பகுதியைக் கைப்பற்றுவதற்கான சர்ச்சைக்குரிய திட்டத்தையும் அறிவித்தது.

இருப்பினும், காசாவை கைப்பற்றும் புதிய நடவடிக்கை ஒக்டோபர் வரை ஆரம்பிக்காது என்று இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.




இராணுவத் தயாரிப்புகளுக்கு நேரம் ஒதுக்குவது மற்றும் துணை படையினரை இணைத்துக் கொள்வது போன்ற தயாரிப்புக்களை இஸ்ரேல் மேற்கொள்ள வேண்டியிருப்பதே இதற்கான காரணமாகும் என்று இஸ்ரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதற்கிடையில், காசாவில் இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடர்கின்றன.

ஹமாஸால் நடத்தப்படும் சுகாதார அமைச்சக தகவல்படி, நேற்று மாத்திரம் குறைந்தது 123 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.



பக்கங்கள் 03

கனடா முரசு

வியாழக்கிழமை | 14/08/2025

## ஒன்றாரியோ மாகாணத்தில் வெப்பநிலையில் மாற்றம்

ஒன்றாரியோ மாகாணத்தில் தற்பொழுது நிலவி வரும் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தெற்கு ஒன்டாரியோவின் பெரும்பாலான C02



# கனடா பிரதமர் மார்க் கார்னியை சந்திப்பதற்கு ஒன்றாரியோ முதல்வர் ஒட்டாவாவுக்கு விஜயம்

**ஒன்டாரியோ முதல்வர் டக் ஃபோர்ட், பிரதமர் மார்க் கார்னியை சந்திக்க ஒட்டா வாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் பின் கட்டண உயர்வுகளால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை வலுப்படுத்த வரி குறைப்பு தேவை என கோரிக்கை விடுக்கும் வகையில் அவர் இவ்வாறு விஜயம் செய்ய உள்ளார்.**

எதிர்வரும் வாரம் பிரதமர் மார்க் கார்னியுடன் ஒரு தனிப்பட்ட சந்திப்புக்கு ஒட்டாவாவுக்கு பயணம் செய்யவுள்ளார்.

பிரதமரை நேருக்கு நேர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார். நாம் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டும் எனவும், நாம் செய்யக்கூடிய சில விடயங்கள் உண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நடவடிக்கைகள் குறித்து போர்ட் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஆனால், ஒன்டாரியோ முதல்வர், தற்போதைய வர்த்தகப் போரை எதிர்கொள்ள நாட்டை சிறப்பாக நிலைநிறுத்தக்கூடிய மாற்றங்களுக்கு கார்னியை வலியுறுத்துவதே ஒட்டாவாவில் தனது கவனமாக இருக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.





# கனடாவின் ஹாலிஃபாக்ஸ் பகுதியில் காற்றின் தரம் தொடர்பில் எச்சரிக்கை

கனடாவின் ஹாலிஃபாக்ஸ் காற்றின் தரம் தொடர்பில் சிறப்பு எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பேயர்ஸ் ஏரி காட்டுத்தீ காரணமாக இந்த எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஜூலியஸ் பவுல்வார்டு மற்றும் டகர் மெக்நீல் டிரைவ் பின்னால் உள்ள காட்டுப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ, தொடர்ந்து எரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீயில் இருந்து வெளியாகும் புகை, அந்தப் பகுதியில் காற்றின் தரத்தை குறைப்பதாக கனடிய 02






# வெப்ப அலை தாக்கத்தினால் மொன்றியலில் ஒருவர் மரணம்

கனடாவின் மொன்றியலில் வெப்ப அலை தாக்கத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார். மொன்றியலின் நகரின் பொது சுகாதாரத் துறையினர் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜூன் மாத இறுதியில் வெப்பநிலை உயர்ந்தபோது மேலும் ஐந்து வெப்பம் தொடர்பான மரணங்கள் பதிவாகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இதுவரையில் ஒரே ஒரு மரணம் மட்டுமே பதிவாகியிருப்பது ஆச்சரியமளிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மக்கள் படிப்படியாக தீவிர வெப்பத்திற்கு பழகியிருக்கலாம் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

மொன்றியலில் கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் கிழமைகளில் வெப்ப நிலை 33 பாகை செல்சியஸை கடந்தது.

செவ்வாய் கிழமை உயர் வெப்ப நிலை 34 பாகை செல்சியஸை எட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு மொன்றியலில் வெப்பம் தொடர்பான மரணங்களின் எண்ணிக்கை குறைவாக பதிவாகியிருக்கபதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீவிர வெப்ப காலங்களில், சுவாச நோய்கள், இதய நிலைகள், நீரிழிவு மற்றும் மனநல பிரச்சனைகளுக்காக மருத்துவமனை அனுமதி விகிதங்கள் உயர்வடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



## ஒன்றாரியோ...

( C01 தொடர்ச்சி)

பகுதிகளையும், டொரோன்டோ பெரும்பாக பகுதியையும் உள்ளடக்கிய வெப்பநிலையுடன் கூடிய வானிலையில் மாற்றம் ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த பல நாள்களாகவெ குறித்த பகுதிகளில் கூடுதல் வெப்பநிலை நீடித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

சில பிராந்தியங்களில் வெப்பநிலை அதிகரிப்பு தொடர்பில் எச்சரிக்கை அறிவிப்புக்களும் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாகாணத்தின் பல பகுதிகளுக்கு வெப்ப எச்சரிக்கை ஏற்கனவே முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

எனினும் வெப்ப எச்சரிக்கை டொரோன்டோவில் இன்னும் நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

டொரோன்டோவில் பகல்நேர உயர் வெப்பநிலை 30 பாகை செல்சியஸாக இருக்கும், ஈரப்பதத்தை கணக்கில் கொள்ளும்போது 38 பாகை செல்சியஸ் போல் உணரப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

## கனடாவின்...

( C01 தொடர்ச்சி)

சுற்றாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மக்கள் வெளியில் செலவிடும் நேரத்தை குறைக்குமாறும், முடிந்தவரை ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடி வைக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் சுமார் 30 தீயணைப்புப் படையினர் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஏரிக்கு அருகாமையில் இருந்த மருத்துவமனையொன்றின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.



# விமான பணியாளர்கள் வேலை நிறுத்தம்; ஏர் கனடா விமான சேவைகள் திடீர் ரத்து

விமான பணியாளர்களின் வேலை நிறுத்த அறிவிப்பை தொடர்ந்து ஏர் கனடா விமான நிறுவனம் தங்களது விமான சேவையை ரத்து செய்து வருகிறது.

விமான பணியாளர்களின் 72 மணி நேர வேலை நிறுத்த அறிவிப்பை தொடர்ந்து கனடாவின் மிகப்பெரிய விமான சேவை நிறுவனமான ஏர் கனடா தனது விமான சேவையை ரத்து செய்து வருகிறது.

இந்த 72 மணி நேர வேலை நிறுத்தமானது சனிக்கிழமை காலை 1 மணி முதல் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊதியங்கள் மற்றும் பிற கோரிக்கைகளை முன்வைத்து 10,000 விமான பணியாளர்களை பிரதிநிதித்துவம் கனேடிய யூனியன் ஆஃப் பப்ளிக் எம்ப்ளாயீஸ் -க்கும், ஏர் கனடா நிறுவனத்திற்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில் தீர்வு எட்டப்படாததை தொடர்ந்து இந்த வேலை நிறுத்த அறிவிப்பானது வெளியாகியுள்ளது.

இந்த திட்டமிடப்படாத வேலை நிறுத்தம் காரணமாக தினமும் 25,000 கனேடியர்கள் உட்பட 130,000 பயணிகள் பாதிக்கப்படக் கூடும் என்று சுமார் 259 விமானங்களை 64 நாடுகளுக்கு இயக்கும் ஏர் கனடா நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த இடையூறு நிறு வனம் மற்றும் அதன் ஊழியர்களையே பாதிக்கும் என்றும் ஏர் கனடா எச்ச ரித்துள்ளது.

விமானங்கள் ரத்து செய்யப்படுவதை அடுத்து, பயணச்சீட்டு உறுதி செய்யப்படாத பயணிகள் விமான நிலையத்திற்கு வர வேண்டாம் என்றும், மற்ற பயணிகள் விமான சேவையை உறுதி செய்த பிறகு விமான நிலையத்திற்கு வரவும் ஏர் கனடா நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.













